**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

நோன்புப் பெருநாள் பிரசங்கம்

**03 மே 2022 / 01 ஷவ்வால் ஹிஜிரி 1443**

**நிரந்தரமான வெற்றியைத் தேடுதல்**

**اللهُ أَكْبَرُ x ٩ كالي**

**اللهُ أَكْبَرُ كَلَّمَا صَلَّى الْمُصَلِّي وَ كَبَّرَ**

**اللهُ أَكْبَرَ كُلَّمَا صَامَ الصَّائِمُ وَ أَفْطَرَ**

**اللهُ أَكْبَرُ كُلَّمَا أنْعَمَ عَلَى الْمُنْعَمِ فَشَكَرَ**

**الله أَكْبَرَ كُلَّمَا ابْتَلَى الْمُبْتَلَى فَصَبَرَ**

**لاَ إِلَهَ إِلَّا اللهُ وَاللهُ أَكْبَرُ**

**اللهُ أَكْبَرُ وَللهِ الْحَمْدُ**

**الحَمْدُ لله الَّذِي تَفَضَّلَ عَلَيْنا بِكَرَمِهِ وَإِحْسَانِهِ،وَرَزَقَنا الصَّبْرَ والاحْتِسَابَ بِقَدَرِهِ وَقَضَاءِهِ، وَحَفِظَنَا مِنْ جَهْدِ البَلَاءِ وَسُوءِ قَضَاءِهِ، وَحَبَّبَ إِلَيْنَا الإِحْسَانَ إِلَى خَلْقِهِ وَعِيَالِهِ، فَلِلَّهِ الحَمْدُ رَبِّ السَّمَوَاتِ وَرَبِّ الأَرْضِ رَبِّ العَالَمِينَ وَلهُ الكِبْرِيَاءُ فِي السَّمَوَاتِ وَالْأَرْضِ وَهُوَ**

الْعَزِيزُ الحَكِيمُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ ذُو الْعَرْشِ الْكَرِيمِ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، عَزِيزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيصٌ عَلَيْكُمْ بِالْمُؤْمِنِينَ رَؤُوفٌ رَحِيمٌ، وَصَلَوَاتُ اللهُ وَسَلَامُهُ عَلَيْكَ يَا سَيِّدِي يَا رَسُولَ اللهِ، نَشْهدُ أَنَّكَ أَدَّيْتَ الأَمَانَةَ وَبَلَّغْتَ الرِّسَالَةَ وَنَصَحْتَ الأُمَّةَ، وَجَاهَدْتَ فِي اللهِ حَقَّ جِهَادِكَ حَتَّى أَتَاكَ اليَقِينُ، أَمَّا بَعْدُ، فَيَا أَيُّهَا الْمُسْلِمُوْنَ، أُوْصِيْكُمْ وَنَفْسِيْ بِتَقْوَى اللَّهِ عَزَّ وَجَلَّ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْن

அல்லாஹ் சுபஹானஹு வதஆலா நமக்கு எண்ணற்ற வெகுமதிகளையும் அருட்கொடைகளையும் வழங்கியதற்காகவும், அவன் நம்மீது எல்லையற்ற கிருபையையும் கருணையையும், இடைவிடாத அன்பு மழையையும் பொழிந்ததற்காகவும் எல்லாப் புகழும் நன்றிகளும் அவனுக்கே உரித்தாகுக!

**பாசத்திற்குரிய சகோதர, சகோதரிகளே!**

ஷவ்வால் மாதத்தின் முதல் நாளின் இக்காலைப் பொழுதில் உச்சகட்டமான நன்றி உணர்வுடன், நமது பாவங்களை நினைத்து வருந்திய நிலையில் இங்கு ஒன்று கூடியுள்ளோம். நமது கவலைகளுக்குப் பதிலாக அமைதி நமக்கு வழங்கப்பட்டுள்ளது; தனிமைக்குப் பதிலாக எல்லாரும் ஒன்று கூடி கொண்டாடும் நிலையையும், பிரிவினைக்குப் பதிலாக நெருக்கமான, ஒன்றுபட்ட நிலையையும் நமக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் கூறுகிறது:

فَلِلَّهِ ٱلْحَمْدُ رَبِّ ٱلسَّمَٰوَٰتِ وَرَبِّ ٱلْأَرْضِ رَبِّ ٱلْعَٰلَمِينَ ﴿٣٦﴾

وَلَهُ ٱلْكِبْرِيَآءُ فِى ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضِ ۖ وَهُوَ ٱلْعَزِيزُ ٱلْحَكِيمُ ﴿٣٧﴾

பொருள்: ஆகவே வானங்களுக்கும் பூமிக்கும் இறைவனான, அகிலத்தாருக்கெல்லாம் இறைவனான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். இன்னும் வானங்கள் மற்றும் பூமியிலுள்ள பெருமை அவனுக்கே உரியது; மேலும் அவன்தான் [யாவரையும்] மிகைத்தவன்; ஞானம் மிக்கவன். [அத்தியாயம்: அல்-ஜாஸியா, வசனங்கள்: 36-37]

எனவே, நமது "தக்வா" [அல்லாஹ்வின் மீதான நமது பக்தியை] பலப்படுத்திக் கொள்வதன் மூலமாக நம்மில் நன்றியுணர்வை ஏற்படுத்திக் கொள்வோமாக! நற்காரியங்களைத் தொடர்ந்து செய்வோமாக! அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்போமாக! அல்லாஹ் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக! எனது சகோதர, சகோதரிகளே! அல்லாஹ் நம்மைப் படைத்தவன்; அனைத்தையும் அறிந்தவன்; ரமதான் மாதத்தில் மட்டுமல்ல மற்ற மாதங்களிலும் அதிகம் மன்னிப்பவன் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

اَللهُ أَكْبَرُ، اَللهُ أَكْبَرُ، اَللهُ أَكْبَرُ،
اَللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ.

**அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே!**

கடந்த ரமதான் மாதம் நம்மீது எம்மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது? என நாம் சிந்திக்க வேண்டும்.

ரமதான் மாதம், நமது உள்ளங்களுக்கு அதிகமான இறை பக்தியின் பால் வழிகாட்டியுள்ளது. அருவருப்பான விஷயங்கள் எவற்றையும் நமது உள்ளங்கள் விரும்பாத அளவுக்கு அவற்றை ரமதான் சிறப்பாக்கியுள்ளது.

ரமதான் மாதம், நமது உள்ளங்களுக்கு உச்சகட்டமான கருணைச் சிந்தனையின் பால் வழிகாட்டியுள்ளது. எந்த அளவுக்கெனில், எம்மாதிரியான வேதனையையும் காண்பதற்கு அவை விருப்பமற்ற வையாக ஆகி விட்டன. அதாவது, யாரும் எம்மாதிரியான வேதனையையும் அனுபவிக்கக் கூடாது எனும் மனப்பான்மை கொண்டவையாக அவை ஆகி விட்டன.

ரமதான் மாதம், நமது உடல்களை ஆரோக்கியமானவையாக ஆக்கி விட்டது. எந்த அளவுக்கெனில், இனிமேல் எந்த வகையிலும் நமது உடல்களுக்கு தீங்குகளை ஏற்படுத்தக் கூடாது எனும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

ரமதான் மாதம், நமது ஆன்மீகத்தை கிருபையால் நிரப்பி விட்டது. எந்த அளவுக்கெனில், நாம் இனிமேல் எம்மாதிரியான கொடுமைகளையும் கொடுங்கோன்மைகளையும் விரும்பாத அளவுக்கு நம்மை உருவாக்கி விட்டது.

இக்காலையில் "ஃபிர்தா" எனப்படும் பரிசுத்தமான இயற்கைத் தன்மையின் பால் திரும்பியவர்கள் பெரும் பாக்கியசாலிகளாக ஆகிவிட்டார்கள். இப்பரிசுத்தமான தன்மையைத் தொடர்ந்து பாதுகாப்பது அவசியமாகும்.

பாவங்கள் மற்றும் கொடுமைகளால் கறைபடிந்ததாகவோ, துன்பங்களால் பலஹீனமானக்கப்பட்டதாகவோ, சுயநலத்தால் சிதைக்கப்பட்டதாகவோ அப்பரிசுத்த தன்மை ஆகி விடக்கூடாது.

**அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே!**

நாம் எப்போதும் நமது உள்ளங்கள் மற்றும் நடத்தைகளின் பரிசுத்தத் தன்மையைப் பாதுகாக்க வேண்டும். தனிநபர்களை ஆர்வப்படுத்தி, முன்னேற்ற வேண்டும். இதுதான், நமது வாழ்க்கையில் மார்க்கத்தைப் பின்பற்றுவதற்கான நமது அணுகுமுறையாக இருக்க வேண்டும். இவற்றின் மூலமே சமுதாயம் இம்மை, மறுமையின் வெற்றியை அடைய முடியும். தொடர்ந்து நம்மையும் நமது ஆன்மீகத்தையும் நாம் முன்னேற்றிக் கொண்டிருப்பது, சோதனைகள் மற்றும் சவால்கள் மூலம் பாடம் பெறுவது, பழைய தவறுகளிலிருந்து தவிர்ந்து கொள்வது ஆகியவற்றின் மூலம் உச்சகட்டமான சாதனைகளை நாம் படைக்கலாம்.

கடந்த இரண்டு ஆண்டுகளின் ரமதானை அசாதாரணமான சூழ்நிலையில் நாம் கொண்டாடியது நமது சிந்தனைகளில் இன்னும் பசுமையாக உள்ளது. அக்காலங்களில் கசப்பான மற்றும் இனிமையான இருவித நிலைகளை நாம் அனுபவித்தோம். அக்காலங்களில் பள்ளிவாசல்களுக்கு நம்மால் செல்ல முடிந்ததில்லை; நமது ஜமாஅத்தார்களையும் நம்முடன் தொழும் நமது தோழர்களையும் இழந்திருந்தோம். எனினும், அந்நிலையிலும் நமது குடும்பத்தார்களுடனான நமது உறவைப் பலப்படுத்தும் ஆற்றலை நாம் பெற்றிருந்தோம். நன்மைக்கான ஒரு வாசல் அடைக்கப்பட்ட போது விரைவாக நமது ஆற்றல்களைப் பயன்படுத்தி, மற்றொரு வாசலைத் திறந்து கொள்ளும் வாய்ப்பையும் பெற்றோம்.

உறுதியான எண்ணமும் உயிரோட்டமும், பலஹீனமாகி விடாத நிலையும், எளிதில் கைவிட்டு விடாத முயற்சியும் நம்மிடம் காணப்படுமெனில் அவை நமது நடத்தைகளை அழகுபடுத்தி விடும். தற்போது சூழ்நிலை தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறது. அதிக மகிழ்ச்சியுடன் ஷவ்வால் மாதத்தை நாம் கொண்டாடி வருகிறோம். எனினும், இது நமது சோதனை முடிந்து விட்டது என்பதற்கான அடையாளம் அல்ல; நாம் வெற்றி பெற்று விட்டோம் என்பதற்கான அறிகுறியும் அல்ல. நாம் கடந்த காலங்களில் பெற்ற பாடங்களையும், நமது பழைய நிலைக்கே நாம் திரும்பி விட வாய்ப்புள்ளது என்பதையும் எளிதில் மறந்து விடக் கூடாது.

நம்மனைவருக்கும் உண்மையான சோதனை எப்போது, ஏன் ஏற்படும் என்பதை அல்லாஹ் பின்வரும் திருக்குர்ஆன் வசனத்தில் கூறுகிறான்;

أَحَسِبَ ٱلنَّاسُ أَن يُتْرَكُوٓاْ أَن يَقُولُوٓاْ ءَامَنَّا وَهُمْ لَا يُفْتَنُونَ ۝٢

وَلَقَدْ فَتَنَّا ٱلَّذِينَ مِن قَبْلِهِمْ ۖ فَلَيَعْلَمَنَّ ٱللَّهُ ٱلَّذِينَ صَدَقُواْ وَلَيَعْلَمَنَّ ٱلْكَـٰذِبِينَ ۝٣

பொருள்: "நாங்கள் "ஈமான்" [ஓரிறை நம்பிக்கைக்] கொண்டிருக்கின்றோம்" என்று கூறுவதனால் [மட்டும்] அவர்கள் சோதிக்கப்படாமல் விட்டு விடப்படுவார்கள் என்று மனிதர்கள் எண்ணிக் கொண்டார்களா? நிச்சயமாக அவர்களுக்கு முன்னிருந்தார்களே அவர்களையும் நாம் சோதித்திருக்கின்றோம் - ஆகவே உண்மையுரைப்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் அறிவான்; இன்னும் பொய்யர்களையும் அவன் நிச்சயமாக அறிவான். [அத்தியாயம்: அல்-அன்கபூத், வசனங்கள்: 2-3]

தமது ஓரிறை நம்பிக்கையிலும் இறைவன் மீதான பக்தியிலும் உண்மையானவர்களாகவும் [அஸ்-ஸாதிகீன்] நேர்மையானவர்களாகவும் உள்ளவர்கள் நன்மையின் பாதையை தொடர்ந்து பின்பற்றுபவர்களாக இருப்பார்கள். எளிதில் தடுமாறுபவர்களாகவோ, எளிதில் மறப்பவர் களாகவோ, நேர்வழியை விட்டும் நழுவுபவர்களாகவோ இருக்க மாட்டார்கள். அவர்களுக்கு அல்லாஹ்வின் அருள்கள் கிடைத்து, எளிதான, இன்பமான வாழ்க்கை அமைந்த போதிலும் வழி தவறி விட மாட்டார்கள்.

சோதனைகள் பல வடிவங்களில் வரும் என்பதை ஓரிறை நம்பிக்கையாளர்கள் எப்போதும் நினைவில் கொள்வது அவசியமாகும். நமது வாழ்க்கையின் நிலை மாறும் போது, அதாவது, கஷ்டமான நிலை மாறி சுகமான நிலை அமையும் போது நாம் கடந்த காலங்களின் மூலம் பெற்ற பாடங்களையும் அறிவு ஞானங்களையும் மறந்து விடக் கூடாது.

ஆரம்பத்தில் நாம் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துபவர்களாக இருந்த பின், நன்றி தெரிவிப்பதில் பலஹீனமான வர்களாகவும் கவனமற்றவர்களாகவும் மாறி விட்டால் நஷ்மடைந்த மக்களில் ஒருவராக நாம் ஆகி விடுவோம். அல்லாஹ், திருக்குர்ஆனின் "யூனுஸ்" எனும் அத்தியாயத்தின் 12-வது வசனத்தில் பின்வருமாறு நினைவூட்டுகிறான்:

وَإِذَا مَسَّ ٱلْإِنسَٰنَ ٱلضُّرُّ دَعَانَا لِجَنۢبِهِۦٓ أَوْ قَاعِدًا أَوْ قَآئِمًا فَلَمَّا كَشَفْنَا عَنْهُ ضُرَّهُۥ مَرَّ كَأَن لَّمْ يَدْعُنَآ إِلَىٰ ضُرٍّ مَّسَّهُۥ ۚ كَذَٰلِكَ زُيِّنَ لِلْمُسْرِفِينَ مَا كَانُوا۟ يَعْمَلُونَ ﴿١٢﴾

பொருள்: மனிதனை [ஏதாவதொரு] துன்பம் தீண்டுமானால் அவன் படுத்த நிலையிலோ அல்லது உட்கார்ந்து கொண்டோ அல்லது நின்ற நிலையிலோ [அதை நீக்குமாறு] நம்மிடமே பிரார்த்திக்கின்றான். ஆனால் நாம் அவனை விட்டும் அவனுடைய துன்பத்தை நீக்கி விடுவோமானால், அவன் தனக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்குவதற்கு நம்மை அழைக்காதது போலவே [அலட்சியாகச்] சென்று விடுகிறான். வரம்பு மீறுபவர்களுக்கு அவர்களுடைய செயல்கள் [இவ்வாறு] அழகாக்கப்பட்டு விடுகின்றன.

**அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே!**

நாம் கடும் வியாதியால் சோதிக்கப்பட்ட காலத்தில் நம்மைச் சுற்றியுள்ள தனிநபர்களுக்குக் கிருபை காட்டுவது மற்றும் அவர்களுக்குக் கருணைச் சிந்தனையை வெளிப்படுத்துவது ஆகியவற்றின் அவசியத்தையும் மதிப்பையும் நாம் உணர்ந்தோம்.

பிரச்சனையின் காலத்தில், முன்னணியிலிருந்து நமக்காக சேவை செய்த தொண்டூழியர்களின் சேவைகளை, தியாக மனப்பான்மையை நாம் நேரடியாகக் கண்டோம். பள்ளிவாசல்கள் போன்ற சன்மார்க்க நிறுவனங்கள் முதற்கொண்டு சமுதாய நலக் கூடங்கள் வரையிலான அனைத்து நிறுவனங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அவர்கள் செய்த தியாகங்களைப் பாராட்டினோம். நம்மில் ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் இணைந்து ஒத்துழைப்பதில் ஆர்வமாகவும் ஒழுக்கமாகவும் காணப்பட்டோம்.

சூழ்நிலைகள் தற்போது எளிதாக மாறி விட்ட போதிலும் மேற்கண்ட நல்ல விஷயங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவது தானே சிறந்த சிந்தனையாக இருக்க முடியும்? நமது ஆர்வமிக்க சிந்தனை அலட்சியமானதாக மாறி

விடுமெனில், பள்ளிவாசல்களில் நாம் கடை பிடித்து வரும் சுத்தமான நிலையும் சீரான ஏற்பாடுகளும் அசுத்தமான, சீர்குலைந்த நிலையாக மாறி விடுமெனில், தியாக உணர்வுகளைக் கொண்ட அதிகாரிகள் மற்றும் தொண்டூழியர்கள் விஷயத்தில் அக்கறை கொள்ளாமல் சுயநலமிக்கவர்களாக நாம் மாறி விட்டால் நாம் நஷ்டமடைந்தவர்களாக ஆகி விடுவோம். நாம் அனைவரும் இணைந்து பெற்ற வெற்றியை தொடர்ந்து பாதுகாத்து வர வேண்டும். அவ்வெற்றி பயனற்றதாக ஆகி விடாமலிருப்பதற்காக அதனை மேற்கொண்டு பலப்படுத்த வேண்டும்.

சர்வதேச அளவில் சிந்தித்துப் பார்க்கும் போது, ஒரு காலத்தில் அமைதியாக இருந்த உலகம் தற்போது குழப்பத்துடனும் கொந்தளிப்புடனும் காணப்படுகிறது.

முற்காலத்தில் தமது குடும்பத்தார்கள் மற்றும் நண்பர்கள் மீது அன்பு கொண்டு அவர்களைப் பாதுகாத்து வந்த மனிதர்கள் தற்போது பகைமை மற்றும் சண்டை சச்சரவுகளுடன் காணப்படுகிறார்கள்.

முற்காலத்தில் மதிப்புமிக்கதாகக் கருதப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வந்த மனித உயிர்கள் தற்போது சண்டை சச்சரவுகளின் காரணமாக மதிப்பற்றவையாகவும் தூக்கி எறியப்படுபவையாகவும் கருதப்படுகின்றன.

நினைவில் கொள்ளுங்கள்! நமது எல்லா விவகாரங்களிலும் நீதத்தை நிலைநாட்டுமாறும், அனைத்துவிதமான கொடுமைகளை ஒழிக்குமாறும், சக மனிதர்களுடன் கருணைச் சிந்தனையுடன் நடந்து கொள்ளுமாறும் நமது மார்க்கம் நமக்குப் போதித்துள்ளது.

ஒரு உண்மையான ஓரிறை நம்பிக்கையாளர் எப்போதும் நன்மைகளைச் செய்வதற்கே முக்கியத்துவம் கொடுப்பவராக இருப்பார். மனிதர்களுக்கு

மத்தியில் எவ்வித பாரபட்சமுமின்றி அனைவரின் நலன்களைப் பாதுகாப்பவராகவும் நன்மைகளைச் செய்வதற்காக போராடுபவராகவும் இருப்பார்.

اَللهُ أَكْبَرُ، اَللهُ أَكْبَرُ، اَللهُ أَكْبَرُ،
اَللهُ أَكْبَرُ وَلِلَّهِ الْحَمْدُ .

**அன்பிற்குரிய எனது சகோதர, சகோதரிகளே!**

நாம் எவ்விதமான சூழ்நிலைகளில் இருந்தாலும் மேற்கண்ட கொள்கைகளையும் சிறந்த மதிப்பீடுகளையும் கடைப்பிடிப்பது அவசியமாகும். மற்ற மனிதர்கள் எப்படி இருந்தாலும் நாம் முறையாக நடந்து கொள்வது அவசியமாகும். நமது இறைத்தூதர்[ஸல்] அவர்களின் பின்வரும் அறிவுரையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்:

لاَ تَكُونُوا إِمَّعَةً تَقُولُونَ: إِنْ أَحْسَنَ النَّاسُ أَحْسَنَّا وَإِنْ ظَلَمُوا ظَلَمْنَا وَلَكِنْ وَطِّنُوا
أَنْفُسَكُمْ إِنْ أَحْسَنَ النَّاسُ أَنْ تُحْسِنُوا وَإِنْ أَسَاءُوا فَلاَ تَظْلِمُوا

பொருள்: "எவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்கிறார்களோ அவர்களுடன் நாம் நல்ல முறையில் நடந்து கொள்வோம்; எவர்கள் அநீதம் செய்கிறார்களோ அவர்களுக்கு நாங்கள் அநீதம் செய்வோம்" எனக் கூறுபவர்களில் ஒருவராக நீங்கள் ஆக வேண்டாம். மாறாக, உங்களை நீங்கள் பலப்படுத்திக் கொள்ளுங்கள்! எவர்கள் உங்களுக்கு நன்மை

செய்கிறார்களோ அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்யுங்கள்; எவர்கள் உங்களுக்கு அநீதம் செய்கிறார்களோ அவர்களுக்கு அநீதம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்]

மேற்கண்ட ஹதீதில் காணப்படும் நல்ல நோக்கம் நம்மிடம் காணப்படும் போது ஒற்றுமையை வலியுறுத்தும் சமுதாயத்தை உருவாக்கியவர்களாக நாம் ஆகுவோம். அவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்பவர்களாக இருப்பார்கள். உன்னதமான நெறிமுறைகளுடன், ஆலோசனகள் மற்றும் விவாதங்களின் மூலம் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வுகளைக் காண்பவர்களாகவும் இருப்பார்கள்.

வருங்காலங்களில் சவால்கள் அதிகரிக்கலாம். நம்மிடம் நல்லெண்ணங்கள் காணப்பட்டால் அவை நமது நடத்தைகளை சீராக்கும். நாம் எதிர்கொள்ளும் சவால்களை மிகைப்பதற்கு அவை உதவியாக இருக்கும். மேலும், நாம் நலமாக வாழ்வதற்கு நம்மிடம் பரிபூரணமான சகிப்புத்தன்மை காணப்படுவதுடன், நமது தீர்மானங்களும் ஒற்றுமையும் பலப்படுத்தப்பட வேண்டும்.

اَللهُ أَكْبَرُ، اَللهُ أَكْبَرُ، اَللهُ أَكْبَرُ،
اَللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ .

**அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே!**

நோன்புப் பெருநாளைக் கொண்டாடி வரும் இக்காலையில் நமது சொந்த பாதுகாப்பையும் சமுதாயத்தின் பாதுகாப்பையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும். சர்வதேச அளவில் பரவி வரும் வைரஸ் விஷயத்தில் மன

நிறைவுடன், அஜாக்கிரதையாக இருக்க வேண்டாம்; அவ்வாறு இருந்தால் வைரஸ் தொற்றிக் கொள்ளும் அபாயம் உள்ளது. இவ்விதமான அஜாக்கிரதை பொதுவாக பலரிடம் காணப்படுகிறது. நினைவில் கொள்ளுங்கள்! நம்மில் ஒவ்வொருவரும் முடிந்த அளவு நம்மைத் தீமைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். சில நாடுகளில் மக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் புறக்கணித்ததன் விளைவாக அந்நாடுகளில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைக் காண்கிறோம்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது வாழ்க்கையில் செழிப்பையும் வளத்தையும் வழங்குவானாக! நாம் விரும்பும் இந்த நாட்டையும் சமுதாயத்தையும் அனைத்துவிதமான ஆபத்துக்களை விட்டும் பாதுகாப்பானாக! இன்ஷாஅல்லாஹ். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**யா அல்லாஹ்!**

உனக்கே நாங்கள் நன்றி செலுத்துகிறோம். உனக்கே அடிபணிந்து நடக்கின்றோம். எங்கள் உள்ளங்களில் ஓரிறை நம்பிக்கையை நிலைநாட்டுவாயாக! நீ எங்களுக்கு அருளியுள்ள "தக்வா" எனும் உன் மீதான பக்தியைப் பலப்படுத்துவாயாக! கடந்து சென்ற ரமதான் மாதத்தில் நாங்கள் நிறைவேற்றிய அனைத்து வணக்க, வழிபாடுகளையும் தயவு செய்து ஏற்றுக் கொள்வாயாக!

**யா அல்லாஹ்! யா ரஹ்மான்! யா ரஹீம்!**

உனது கிருபையையும் எங்கள் பாவங்களுக்கான மன்னிப்பையும் எங்களுக்கு வழங்குவாயாக! எங்கள் அனைத்து நற்காரியங்களையும் ஏற்றுக் கொள்வாயாக! எங்களின் நற்காரியங்களில் குறைபாடுகள்

இருந்தால் தயவுசெய்து மன்னித்து விடுவாயாக! யா ரஹ்மான்! எங்களுக்கு அமைதியை வழங்குவாயாக!

**யா அல்லாஹ்! யா லதீஃப்!**

அனைத்து விஷயங்களுக்கான பதில்களும் தீர்வுகளும் உனது கைகளில் தான் உள்ளன. உன்னிடமே நாங்கள் ஆதரவு வைக்கின்றோம்; உன் மீதே நம்பிக்கை கொள்கிறோம். யா அல்லாஹ்! எங்களில் நோய்வாய்ப்பட்டிருப்பவர்களுக்கு நலத்தை வழங்குவாயாக! பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தின் குறைவினால் கஷ்டப்படுபவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை அதிகரிப்பாயாக! தயவுசெய்து அவர்களுக்கு அதிர்ஷ்டங்களை வழங்குவாயாக! பலஹீனமான எங்களது நிலையை உறுதியானதாகவும், எங்களின் கஷ்டங்களை எளிதாகவும் ஆக்குவாயாக! பயத்திலிருந்து பாதுகாப்பின் பக்கமும், மனிதாபிமானமற்ற தன்மையிலிருந்து கருணைச் சிந்தனையின் பாலும், அவமானத்தை விட்டும் புகழின் பாலும், நம்பிக்கையற்றதன்மையிலிருந்து நம்பிக்கையுடன் கூடிய உத்வேகத்தின் பாலும், பிரிவிலிருந்து ஒற்றுமையின் பாலும், தவறான நம்பிக்கையிலிருந்து நேர்வழியின் பாலும், தடுமாற்றத்திலிருந்து நிலைத்தன்மையின் பாலும் எங்களின் நிலையை மாற்றுவாயாக!

**ஆமீன். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.**

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَ أَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَ لَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم**

## Second Khutbah

اللهُ أَكبَر ٧ X كالي

الْحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ الْعَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّيَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَ بَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلْمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ، الْأَحْيَاءِ مِنهُم وَالْأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا الْبَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالْمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ الْبُلْدَانِ عَامَّةً، يَارَبَّ الْعَالَمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الْآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالْبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ الْعَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.